**OS NO.124/2017** **Date: 21.07.2025**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )

சாட்சியாகிய திரு. ரமேஷ் என்ற **Dw2** நபரின் வாக்குமூலம் (**1876**ம் ஆண்டின் **10** விதியின் **Tr.P.Ravichandran, Bench Clerk Gr–I** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்

செய்யப்படுகிறது.

பெயர் – திரு. ரமேஷ்

த/பெ, – திரு. ஏழுமலை

வயது – **50/2025**

தொழில் – வியாபாரம்

முதல் விசாரணை:

நான் என் முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்யப்பட்டு அது ஏற்கனவே பதிவு செய்துகொள்ளப்பட்டுள்ளது.

__வாதி தரப்பில் குறுக்கு விசாரணை__

நான் எங்கு வசிக்கிறேன் என்றால் எண்.153, விநாயகர் கோவில் தெரு, கம்மாளம்பூண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்துவிட்டு தான் கையெழுத்து செய்தேன் என்றால் ஆமாம். இந்த வழக்கு பற்றிய சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதியின் வசிப்பிடம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் வாதியின் வசிப்பிடம் குடியாத்தம், வேலூர் மாவட்டம் என்று சொல்லியிருந்தால் தவறு என்றால் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்ததை சொல்லியுள்ளேன். மனகோர் என்பவரை எனக்கு

எத்தனை வருடமாக தெரியும் என்றால் அவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியாது. கம்மாளம்பூண்டியில் உள்ள எனது சொத்து சம்மந்தமாக மனோகர் என்பவருக்கு அதிகாரம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 07.10.2015 அன்று மனோகர் என்பவருக்கு நான் உத்திரமேரூர் பதிவு அலுவலகத்திற்கு வரசொல்லி வா.சா.ஆ.3 அதிகாரபத்திரத்தை எழுதி பதிவு செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த அதிகார பத்திரத்தில் என்ன சங்கதிகள் எழுதப்பட்டுள்ளது என்று படித்து பார்த்த பிறகு தான் பதிவு அலுவலகத்தில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். பொது அதிகார பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள புல எண் சொல்ல முடியுமா என்றால் அந்த சொத்தின் விஸ்தீரணம் தெரியும், புல எண் தெரியாது. அந்த சொத்து எனக்கு எப்படி வந்தது என்றால் என்னுடைய தாய் தந்தை மூலமாக வந்தது. எனது அப்பா ஏழுமலை எனக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ-1 செட்டில்மென்ட் பத்திரம் மூலம் அதிகார பத்திரத்தில் உள்ள சொத்து கிடைக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு எனது தாயும் தந்தையும் சேர்ந்து எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் பத்திரம் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு நான் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்த தேதியில் எனது தாயும் தந்தையும் எனக்க எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் பத்திரத்தை 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்தேன் என்றால் இல்லை. வா.சா.ஆ-3 பொது அதிகார பத்திரத்தில் சாட்யாக யாரை போட்டுள்ளோம் என்றால் உதயன் மற்றும் பாபு ஆகியோர்கள் சாட்சியாக இருந்தார்கள். வா.சா.ஆ-3ல் உதயன் மற்றும் நவீன் குமார் என்பவர்கள் தான் சாட்சியாக கையெழுத்து செய்தார்கள் என்றும் நான் கூறுவது போல பாபு என்பவர் சாட்சியாக கையெழுத்து செய்யவில்லை என்றால் உதயன் மற்றும்

நவீன் குமார் தான் கையெழுத்து செய்துள்ளார்கள். பொது அதிகார பத்திரம் பதிவு செய்த அதே நாளில் வா.சா.ஆ.4ம் பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ-4ல் வாதி 1ம் பிரதிவாதியிடம் இரண்டு முறை பணம் கொடுத்து செல்லெழுதி வாங்கியுள்ளார்ர என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாதி தரப்பிலும் வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆகவும் 1ம் பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணமாக நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் அதை பற்றி எனக்க தெரியாது. பி.வா.சா.ஆ.3 மற்றும் 4 மேலெழுத்து சாட்சியாக கையொப்பம் செய்துள்ள உதயன் மற்றும் உதயகுமார் ஆகியோரை நான் இந்த வழக்கில் எனது தரப்பில் குறுக்கு விசாரணை செய்துள்ளேனா என்றால் செய்தேன். அவ்வாறு குறுக்கு விசாரணையின் போது செல்லெழுதிய பணம் எனக்கு சேர்ந்ததா இல்லையா என்று மேற்படி சாட்சிகளிம் கேட்டேனா என்றால் கேட்டேன். அதற்கு அந்த இரண்டு நபர்கள் அதை பற்றி தெரியாது என்று கூறிவிட்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ-4ஐ பதிவு செய்யும் போது அந்த பத்திரத்தில் சாட்சிகளா கையெழுத்து செய்தவர்களையும் குறுக்கு விசாரணை செய்தேனா என்றால் உதயனை மட்டும் விசாரணை செய்தோம், பாபுவை விசாரணை செய்யவில்லை. வா.சா.ஆ.4ஐ பதிவு செய்யும் போது அதை எழுதிக்கொடுத்த 1 மற்றும் 2ம் நபர்களை எனக்கு நன்கு தெரியுமா என்றால் நவீன் குமார் மூலமாக மனோகரை தெரியும். வா.சா.ஆ.4 பதிவு செய்யும் போது அதில் கண்டுள்ள இருவரை எனக்கு தெரியும் என்று இன்னார் என்றும் அதே அலுவலகத்தில் நானும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளேன் என்றால் நான் கையெழுத்து செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4ல் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. நான்

பதிவு அலுவலகத்தில் கையெழுத்து செய்துவிட்டு தற்போது வா.சா.ஆ.4ல் நான் கையெழுத்து செய்யவில்லை என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)